சமூக நல இயக்கமும் ஏகத்துவக் கலாபீடமும்

# அஷ்ஷெய்க் முஹம்மது அபூபக்கர் ஸித்தீக் மதனி

எம்.ஏ.ஹபீழ் ஸலபி




## தொடர் - 01

(“இலங்கை முஸ்லிம்களிடையே பணியாற்றும் இஸ்லாமிய சமூக நிறுவனங்களின் சமூக நலப் பணி, ஆன்மிக, அரசியல், தஃவா இயக்கங்கள் பற்றியும் அதிலுள்ள பன்முக ஆளுமைகளைப் பற்றியும் நான் தொடர்ந்து எழுதிவரும் பாங்கில், சமூக நல இயக்கத்தினூடாக பல ஏகத்துவ கலாபீடங்களின் ஸ்தாபகராக, ஸலபிய்யாவின் பணிப்பாளராக பல தசாப்தங்களைக் கடந்து செல்லும் அவரின் தொடரான இயக்கப் பணி பற்றிய எனது புரிதலையும் இன்றைய சமூகத்தின் பகைப்புலனில் அவர் பற்றிய மதிப்பீட்டையும் இக்கட்டுரையில் பேச முனைகின்றேன். விமர்சனங்களை அடுத்த பகுதயில் முன்வைக்கவுள்ளேன்.

இது, அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி பற்றிப் புகழ்பாடும் கட்டுரையல்ல. அவர் பற்றிய (Hero worshipping) வும் இல்லை. வேறு நோக்கங்களுக்காக எழுதப்பட்டதும் அல்ல. நான் எந்த இயக்கமும் சாராமல் சொந்தக் காலில் நிற்கும் தருணத்தில்தான் இதை எழுதியுள்ளேன்.

எனது ஆளுமையில் தாக்கம் செலுத்திய ஓர் ஆசான்தான் முஸ்தபா மவ்லானா அவர்கள். அவரைப் பற்றி நான் தாயிராவின் முதலாவது நினைவு மலரில் எழுதிவிட்டேன். மவ்லானா அவர்கள் உயிருடன் இருக்கும் போதே, அவரின் வாழ்க்கைக் குறிப்புக்களை நான் பெற்றுக் கொண்டமை அவர் பற்றி எழுதுவதற்கும் அவர் பற்றி ஆய்வு செய்வோருக்கும் உதவியாக அமைந்தது.

அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்கள் பற்றி எழுத முனையும் ஓர் ஆய்வாளர் எழுப்பும் கேள்விகள் சிலவற்றிற்க்கு உரிய பதில்கள் இதுவரை பெறப்படாமை வேதனை அளிக்கிறது. அவரது வாழ்க்கை வரலாறு உறுதியான ஆவண ஆதாரங்களால் கோவைப்படுத்தப்பட்டு, தெளிவாக எழுதப்படவில்லை என்ற விமர்சனம், அவர் பற்றி எழுத முனையும் ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகிறது. அந்த நிலை இனியும் தொடரக் கூடாது என்ற காரணத்தால், அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்களின் பொதுப் பங்களிப்பை அவர் வாழும் காலத்திலேயே ஆவணப்படுத்துவது அவரது மாணவன் என்ற வகையில் எனது கடமை என்பதற்காக மட்டுமே இதை எழுதுகின்றேன். அவரது பணியில் பலரது பல்வகைப்பட்ட பங்களிப்புகள் பெறப்பட்டுள்ளன. அவர்கள் அனைவரும் நன்றிக்குரியவர்கள். மனிதன் என்ற வகையில் எந்த மனிதனுக்கும் விமர்சனமும் இருக்கிறது. நியாயமான விமர்சனங்களையும் நான் இங்கு மதிப்பீடு செய்ய முனைந்துள்ளேன். விமர்சனங்களை பக்திபூர்வமாக அணுகாமல் நியாயபூர்வமாக நோக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.)

## ஜனனமும் கல்வியும் :

*இலங்கையில் பிரித்தானிய காலணித்துவ ஆதிக்கத்திற்கு எதிரான கோசம் எழுப்பப்பட்டு, சுதந்திரப் போராட்ட மேகம் சூழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில், இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் இணைவைப்புக் கோட்பாட்டை எதிர்த்து ஏகத்துவக் கோட்பாட்டை நிலைநாட்ட அல்லாமா அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்கள் 11-11-1947 அன்று ஜமாஅத் அன்ஸாரிஸ் சுன்னத்தில் முஹம்திய்யாவை ஆரம்பித்து வைத்தார்கள், அன்றைய சூழலில் புனித இஸ்லாம் பற்றிய தெளிவற்ற இலங்கை சமூகத்தில் இவரது போதனைகள் அந்நியமான ஒன்றாகத் தோன்றியது. அல்குர்ஆன் அஸ்ஸுன்னா மாத்திரமே பின்பற்றத்தக்கது என்ற உன்னத நோக்கோடு, அல்லாமா அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்களால் ஜம்இய்யா ஆரம்பிக்கப்பட்டு, இரண்டு ஆண்டுகளின் பின்னர் அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள் 22-05-1949 அன்று எழில் மிக்க பறகஹதெனியக் கிராமத்தில் நாகூர் பிச்சை - ஷஹீதா உம்மா தம்பதிகளின் 12 பிள்ளைகளில் ஒருவராகப் பிறந்தார்கள்.*

*இவர் பிறப்பதற்கு முன்னரே ஏகத்துவ எழுச்சியும் புரட்சியும் இவரது கிராமத்தில் அல்லாமா அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்களால் துவக்கப்பட்டிருந்தது. அவரது வீரியமான ஏகத்துவப் பிரசார நடவடிக்கை இவரது இளம் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இவரது குடும்பம், பக்ரியின் பிரசாரப் பணிகளுக்கு பங்களிப்புச் செய்தது. அதன் போது, விவேகமும் திறமையும் உள்ள அபூபக்கர் ஸித்தீக் என்ற இளைஞர், பக்ரி அவர்களால் இனங் காணப்பட்டார். தனது கொள்கையை வீரியத்துடன் நகர்த்திச் செல்ல வல்லவராக அவரைக் கருதினார். அவரது தந்தை நாகூர் பிச்சையின் அனுமதியுடன் 1969 களில் மதீனா இஸ்லாமியப் பல்கலைக்கழகத்திற்கு உயர்கல்விக்காக அனுப்பிவைத்தார்.*

*போக்குவரத்து, தொடர்பாடல், தொழில் நுட்ப வசதிகள் குன்றிய அன்றைய சூழலில், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில், அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றவும், இஸ்லாத்தை ஆழமாகக் கற்கவும் மதீனா இஸ்லாமியப் பல்கலைக்கழகத்திற்குப் பயணமானார். 1969 களில் இலங்கையில் சவுதி அரேபிய தூதரகம் திறக்கப்பட்டிருக்கவில்லை. இந்தியா, பாகிஸ்தான் வழியாகத்தான் சவுதி அரேபியா செல்லவேண்டும். எனவே, அவரது கல்விப் பயணத்தில் பாகிஸ்தானிலும் சிறிது காலம் தங்கியிருந்து, அங்கும் சில அறிஞர்களிடம் கற்றுள்ளார்.*

*இறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் இஸ்லாத்தை அரியணையில் அமர்த்திய மதீனாவில் தனது உயர் தரக் (A/L) கல்வியை அரபு மொழியில் திறமைத் தரத்தில் நிறைவு செய்துவிட்டு, தொடர்ந்து தஃவா பீடத்தில்* كلية الدعوة وأصول الدين *துறையில் பட்டப்படிப்பையும் (ممتاز) அதிவுயர்தரச் சித்தியில் நிறைவு செய்து, 1980 களில் நாடு திரும்பினார்.*

*தொழில், உயர்கல்வி என்பவற்றிற்காக போட்டித் தன்மையற்ற வாய்ப்புகள் அப்போது அங்கு கிட்டிய போதும், தஃவா எனும் உன்னத இலட்சியப் பணியை நோக்கி அவர் நகர்ந்தார். இதில், அவரது மரியாதைக்குரிய ஆசான், அறிஞர் அப்துல் அஸீஸ் பின் பாஸ் (ரஹ்) அவர்களின் செல்வாக்கு மிக முக்கியமானது. அவர் தொடர்ந்து M.A. கற்கை நெறியை தொடர்ந்திருந்தால் அவர்தான் இலங்கைக்கான மதீனாப் பல்கலைக்கழகத்தின் முதல் கலாநிதியாக வரலாற்றில் இடம்பிடித்திருப்பார். எனினும், தனது ஆசான் அப்துல் அஸீஸ் அப்துல்லாஹ் பின் பாஸ் (ரஹ்) அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அனைத்தையும் தியாகம் செய்து, தஃவாவிற்காக தன்னை அர்ப்பணித்தார். சமூகத்தில் தனக்காக வாழ்பவர்கள் அதிகம். ஆனால், சமூகத்திற்காக*

ஆர்ப்பணமானவர்கள் ஒரு சிறு தொகையினர்தான். அத்தகையவர்களில் ஒருவராகவே அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்களை இனம் காண காணமுடிகிறது.

இலங்கையில் SSC வரை கற்றிருந்த அவர், அரச தொழில் வாய்ப்பு அப்போது, SSC வரை படித்தோருக்கு இலங்கையில் இலகுவாக கிடைக்கும் சந்தர்ப்பம் இருந்தும், அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்கள் விட்டுச் சென்ற வெற்றிடத்தை நிரப்பவும் அவரது கனவை நிறைவேற்றவும் முனைந்து, பாரிய பணியைத் தனது தலையில் சுமந்து கொண்டு, தனது பயணத்தைத் தொடர்ந்தார். அதில் அவர் இன்று மிகப் பெரும் அடைவையும் வெற்றியையும் பெற்றுள்ளார். அவரது சமூக நல, கல்விச் சேசைகள், பிரசார நடவடிக்கைகள் என்பன பற்றிய, இன்றைய சமூகப் பகைப்புலனில் அதன் தாக்க விளைவுகளின் மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளதாக நான் கருதுகின்றேன்..

இலங்கை முஸ்லிம் சமூகத்திடம் மலிந்திருந்த மூட நம்பிக்கைகளையும் மார்க்க அறிவு மந்த நிலையையும் மாற்றி, மார்க்க அறிவு வழிமுறையில் சிந்திக்கவும் வழிபடவும் தக்க ஒரு சமூக மாற்றத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்திய அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்கள் துவக்கிவைத்த அப்பணியை, அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள் தனது இரண்டு முக்கிய நிறுவனங்களினூடாக தொய்வின்றி தொடர்ந்து நகர்த்திக் கொண்டிருக்கின்றார்.

இன்று, அவர் தலைமை தாங்கும் ஜமாஅத் அன்ஸாரிஸ் சுன்னத்தில் முஹம்திய்யா இலங்கை முஸ்லிம் உம்மத்தை இஸ்லாமிய சிந்தனை நெறியில் வடிவமைப்பதிலும் அதன் கல்வி, சமூக, பண்பாட்டு நல மேம்பாட்டிலும் ஆழமான பங்களிப்பை வழங்கியுள்ளது. ஸலபுஸ் ஸாலிஹீன்களின் வழி நின்று, இலங்கை இஸ்லாமிய உம்மத்தின் மீள் எழுச்சிக்கு அறிவுணர்வு சார்ந்த சேவையை அவர் தொடராக வழங்கி வருகின்றார்.

ஷிர்க், பித்அத், மூட நம்பிக்கை என்பவற்றை ஒழிப்பதில் அவரது சமூக நல சேவை பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளது. அனைவராலும் மெச்சத்தக்க அவரது ஒழுக்கம், நேரிய போக்கு, தூய நோக்கு என்பன இப்பணியில் அவருக்கு தொடரான சமூக அங்கீகாரத்தையும் மக்களின் அன்பையும் பெற்றுக்கொடுத்துள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக அவரது தூய்மையான எண்ணத்திற்கு அல்லாஹ்வின் அருள் வளம் மிக முக்கியமானது. அல்லாஹ்வின் கருணையும் கிருபையும் இன்றி இந்த அளப்பரிய சேவையை யாராலும் ஆற்றிட முடியாது.

**ஆசான்கள் :**

இஸ்லாமிய உலகில் தலைசிறந்த பல அறிஞர்களிடம் அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள் இஸ்லாத்தைக் கற்றுள்ளார்கள். அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்களும் சவூதி அரேபியாவின் தலைமை முப்தியாக இருந்த பேரறிஞர் அப்துல் அஸீஸ் பின் பாஸ் (ரஹ்) அவர்களும் நெருங்கிய நண்பர்கள். அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி மீது அவ்விருவரும் நன்நம்பிக்கை வைத்திருந்தனர். இருவரின் மாணவராக இருந்து இஸலாமியக் கலைகளைக் கற்கும் சந்தர்ப்பமும் இவருக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

ஹதீஸ் துறையில் மிகப் பெரும் ஆளுமையாக விளங்கி, முஸ்லிம் உம்மத்தின் பெரும் எண்ணிக்கையினரால் அதிகம் மதிக்கப்பட்ட பேரறிஞர் முஹம்மது நாஸிருத்தீன் அல்பானியிடம் கல்வி கற்கும் வாய்ப்பையும் அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள் பெற்றுள்ளார்கள். அல்பானி அவர்கள் 3 ஆண்டுகள் மட்டுமே மதீனா இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் கற்பித்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் அவரிடம் கற்றுள்ளார்கள். இன்று, இலங்கையில் உயிர்வாழும் முஹம்மது நாஸிருத்தீன் அல்பானியின் ஒரே மாணவர் இவர் மட்டுமே. அதேபோல், இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்த ஸலபிய்ய அறிஞரான அப்துல் முஹ்ஸின் அல்பத்ர் அல்அப்பாத்

என்பவரிடமும், மஸ்ஜிதுன் நபவியில் தொடர் வகுப்புக்களை நடாத்தி வந்த அபூபக்கர் ஜாபிர் அல் ஜஸாயிரி என்ற அறிஞரிடமும் கற்றுள்ளார்.

இவர், இது போன்ற இஸ்லாமிய உலகில் தலை சிறந்த அறிவு ஆளுமைகளின் பாசறையில் பயிற்றப்பட்ட மாணவர் என்பது, இவரின் மாணவர்களாகிய எங்களுக்குப் பெருமை சேர்க்கிறது.

அசத்தியக் கருத்துக்களை எதிர்ப்பதில் அல்பானியின் வேகமான அணுகுமுறை இவரிலும் வெளிப்படுவதை அவதானிக்கலாம்.

**கற்பித்தல் செயற்பாடு :**

ஸலபிய்யாக் கலாபீடம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் கற்பித்தல் செயற்பாட்டில் மிகுந்த ஈடுபாடு காட்டி வந்துள்ளார். நான் மாணவனாக இருந்த காலப்பகுதியில் ஸலபிய்யாவின் முதலாம் - இரண்டாம் வகுபபு; மாணவர்களுக்கு அரபு எழுத்தணி கற்பிப்பார். அதில் அவருக்கு மிகுந்த திறமை உள்ளது. அறபு எழுத்தணியில் எனக்கு அதிக ஆர்வம் வந்தது இவரது எழுத்து வண்ணங்களால்தான். அத்தனை நுணுக்கமாக خط النسخ நஸ்க், خط الرقعة ரிக்ஆ வகை அரபி எழுத்துக்களை வரைவார். நான் ஸலபிய்யாவில் இரண்டாம் ஆண்டு முதல் பட்டம் பெற்ற பின் இரண்டு அண்டுகள் வரை ஓர் Artist – Calligrapher ஆகவும் ஜம்இய்யாவிற்குப் பணியாற்றியுள்ளேன். என்னை ஓர் Artist ஆக மாற்றிய பெருமையில் அவருக்கும் பங்குள்ளது..

தஜ்வீத், உஸூலுல் பிக்ஹ், அகீதா போன்ற பாடங்களையும் ஆழமாகக் கற்பிப்பார். பராயிழ் எனும் வாரிசுரிமைச் சொத்துப் பிரிப்பு தொடர்பான பாடம் மிகவும் கஸ்டமானது. அதில், தேறுவதே கடினமானது. அதைக் கற்பதற்கும் கற்பிப்பதற்கும் கணித அறிவு வேண்டும். அவரிடம் கணித அறிவு உள்ளதால், அந்தப் பாடத்தை மிக இலகுவாகக் கற்பிப்பார். இலங்கையில் பராயிழ் தொடர்பான ஆழமான அறிவு உள்ளவராக ஆஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்களைக் காணமுடிகிறது.

நான் அவரிடம் அரபு எழுத்தணி, தஜ்வீத், உஸூலுல் பிக்ஹ், பராயிழ் என்பன போன்ற பாடங்களைக் கற்றுள்ளேன். நான், 3 ம் ஆண்டு கற்கும் போது, அவர் நோய்வாய்ப்பட்டு கொழும்பு சுலைமான் வாட்டில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அதனால், சிறிது காலம் தஜ்வீத் பாடம் எடுக்க அவரால் முடியவில்லை.

“கற்பித்தல் முறையில் விரிவுரைத் (Lecture) தன்மையையும் மாணவர் மையக் கல்வி முறையையும் அவர் கடைப்பிடிப்பார். ஒரே (Teaching Methodology) வழிமுறையில் கற்பித்தல் செயற்பாட்டை அணுகாமல், பாடவிதானங்களுக்கு ஏற்ப மாணவர்களுக்கு புரிய வைப்பதில் அவரது கற்பித்தல் முறையில் தேவையான மாற்றங்களை அவ்வப்போது மேற்கொள்வார். அத்தோடு, 1983 களிலேயே (Type Writer) தட்டச்சு இயந்திரத்தில் வேகமாக டைப் பண்ணும் ஆற்றலும் அவருக்கு இருந்தது. 1990 களில் கணினியைப் பயன்படுத்தவும் அவர் தெரிந்திருந்தார். ஜம்இய்யாவின் அறிக்கைகளை அவரே கணினியைப் பயன்படுத்தி தயார் பண்ணினார். மாணவர்களுக்கான தஸ்கிய்யாவை அவரே டைப் பண்ணி வழங்கினார்” என்று அவரிடம் உஸூலுல் பிக்ஹ், அல் அகீததுல்வாஸிதிய்யா, பராயிழ் போன்றவற்றைக் கற்ற, அவரது முக்கிய, ஆரம்பகால மாணவர்களில் ஒருவரான கலாநிதி எம்.எல். முபாரக் மதனி அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இன்று நவீன கற்பித்தல் முறைகளில் கவன ஈர்ப்பைப் பெற்று, பேசுபொருளாகியுள்ள மாணவர் மையக் கல்வி முறைமையை 30 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் தனது கலாபீடக் கற்பித்தல் செயற்பாட்டில் பிரயோகித்துள்ளார் என்பது வியப்புக்குரியது. 69வது அகவையில் உள்ள அவர் ஓர் இளைஞனுக்குரிய மிடுக்கோடு, இன்றுவரை

கற்பித்தல் செயற்பாட்டைவிடாமல் தொடர்கிறார். இது கற்பித்தலில் அவருக்குள்ள விருப்பையும் அனுபவத்தையும் வெளிப்படுத்துகிறது. ஸலபிய்யாவின் பாடத்திட்டம் பல அரபுலக இஸ்லாமியப் பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டத்திற்கு நிகராக இவரால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தனது மாணவர்களோடு மிகவும் நெருக்கமாகப் பழகுவார். மாலை நேரம் விடுதியில் மாணவர்களோடு Volley Ball விளையாட ஒரு பக்கம் செயலரும் மறுபக்கம் முதீரும் இணைந்து கொள்வார்கள். ஒரு முறை கிரிகட் விளையாடும் போது, துடுப்பாட்டத்தில் ஈடுபட்ட ஒரு மாணவனின் துடுப்பில் தொடராக சில பந்துகள் படவில்லை. உடனே அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள், சுளகு ஒன்றைக் கொண்டு வந்து தந்துதான் உன்னைப் பயிற்றுவிக்க வேண்டும் என்று நக்கல் பண்ணினார். சுற்றுலாவில் கலந்த கொண்டு குளம், கடல், ஆறு போன்றவற்றில் மாணவர்களோடு சேர்ந்து குளித்து மகிழ்வார். மாணவர்களுக்கு நீச்சல் கற்றுக் கொடுப்பார். அப்போது, நீரில் நீண்ட நேரம் டம்பிடித்து நிற்பார். வேகமாக வாகனத்தைச் செலுத்தும் திறமையும் அவரிடம் உள்ளது. இது போன்ற வேறு பல திறமைகளும் அவரிடம் காணப்படுகின்றன.

பறகஹதெனியவில் மாநாட்டுக்கான ஏற்பாடு நடைபெற்றால், அதற்காக மாணவர்கள், ஊர் மக்கள் உழைக்கும் போது, அவரும் சேரந்து பணிகளில் பங்கெடுப்பார். 1996ம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது பட்டமளிப்பு மற்றும் மாநாட்டிற்கான ஆயத்தப் பணிகள் நடைபெறும் போது, எனது வகுப்பு நண்பர்களோடு, நான் மண்வெட்டியை வைத்து, விடுதிக்கருகில் புல் செதுக்கிக் கொண்டிருந்தேன். என் அருகில் வந்த அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள், இப்படிச் செதுக்கினால், கை நோகும் என்று மண்வெட்டியை வாங்கி பிடிக்கும் முறையைச் சொல்லித் தந்து செதுக்கிக்காட்டினார். இவ்வாறு மாணவர்களோடு மிகவும் நெருக்கமாக இருந்தார். தற்போது, ஜம்இய்யாவின் பணிகள் விரிவடைந்துவிட்டதால், முன்னர் போன்று மாணவர்களுடன் நேரம் ஒதுக்க அவருக்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

**இயக்க நலப் பணி :**

இலங்கையில் ஏகத்துவ எழுச்சியின் துவக்கப் பள்ளி எது என்றால், அது அல்லாமா அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்களால் இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னைய ஆண்டு துவக்கிவைக்கப்பட்ட ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாதான். ஸ்தாபகரின் மறைவைத் தொடர்ந்து, இந்த இயக்கத்தை முன்னணிக்குக் கொண்டுவந்த பெருமை அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனிக்கே உரியது. இன்று இலங்கையில் பல்வேறு ஏகத்துவ அமைப்புகளின் உருவாக்கத்தின் தாய்ப் பள்ளியாக ஜம்இய்யாதான் திகழ்கிறது.

சிறு பராயத்தில் மிகுந்த பொருளாதார நெருக்கடிகளை சந்தித்ததாக ஒரு தடவை வகுப்பில் குறிப்பிட்டார். அவரது இளம் பராய வறுமையின் சோகக் கதைகளைக் கேட்கும் போது, எங்கள் கண்களும் பனித்துவிட்டன. அந்த வறுமையின் கோரப் பிடி மற்றவர்களுக்கு வரக் கூடாது என்று இன்று ஜம்இய்யா மூலம் அரிய பல சமூ மேப்பாட்டு நலத்திட்டங்களை அமுல்படுத்தியிருப்பதற்கான காரணமாகக் கருதமுடிகின்றது.

*“இலங்கை “பறகஹதெனியா”வில் உள்ள ‘ஜம்இய்யத்து அன்சாரி சுன்னத்தில் முஹம்மதிய்யா” (JASM) தலைமை அலுவலகத்தில் தங்கி, JASM சார்பிலேயே அதன் கிளைகள் உள்ள பல ஊர்களுக்கும் பிரசாரம் செய்யச் செல்லும் வாய்ப்புக் கிட்டியது.*

*அங்கு தங்கி இருந்த காலங்களில் ஒவ்வொரு நாடுகளிலும் இதுமாதிரியான அமைப்புகள் உருவாகி, மக்களிடையே பிரசாரம் நடந்தால் மக்கள் மூடநம்பிக்கைகளில் சிக்கிடமாட்டார்களே, மக்கள் குர்ஆனை, ஹதீஸை விட்டும்*

வெளியேறிடமாட்டார்களே என்ற உணர்வே ஏற்பட்டது. ஆம்! அந்த அளவுக்கு திட்டமிட்ட பிரசாரப் பணி நடந்து வருகிறது. ஒருபுறம் கல்வியை போதிக்கும் பணியில் ஈடுபட்டு, ஓய்வு கிட்டும் போது, வெளியூர்களுக்கும் சென்று பிரசாரம் செய்கிறார்கள் என்றால், அங்குள்ள பிரசாரகர்களின் உயரிய நிலையை சுட்டிக் காட்ட வேறு ஒரு தேவை இல்லை.

வெறுமனே பிரசாரம் செய்யும் பணியை மட்டும் JASM செய்யவில்லை. பொதுச் சேவைகளில் அது தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறது. வசதி உள்ளவர்களிடம் நிதியைத் திரட்டி வசதி இல்லா மக்களுக்கு குடியிருக்க வீடுகளை கட்டித் தருகிறது. குடிநீர் இல்லாப் பகுதிகளில் குடிநீர் கிணறுகளை அமைத்து தருகிறது. பள்ளிகள் (இறை இல்லங்கள்) கட்டிட முடியாத ஊர்களுக்கு, இறையில்லத்தை உருவாக்கித் தருகிறது. மருத்துவமனை மூலம் நோயுற்றவர்களுக்கு சேவை செய்து வருகிறது…" (பெருநாள் மலர், தைமிய்யா புக் சென்டர்-மதுரை-1 ஹிஜ்ரி 1419 ரமழான் ப : 59)

தமிழ்நாட்டிலுள்ள ஜம்இய்யது அஹ்லில் குர்ஆன் வல் ஹதீஸ் அமைப்புடன் தஃவா ரீதியான தொடர்பை வைத்துள்ளார். இந்த அமைப்பால் நடாத்தப்படும் ஜாமிஅத்துல் பிர்தவ்ஸிய்யாவில் தாருத் தவ்ஹீதின் சில மாணவர்கள் கற்றுள்ளனர். இது அந்நிறுவனத்துடனான நெருக்கமான தொடர்பால் கிடைக்கப்பெற்றது என்பதை மறுக்கமுடியாது.

அரபுலகிலுள்ள பின்வரும் நிறுவனங்களுடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தி, பல்வேறு சமூக நலப் பணிகளை மேற்கொண்டுவருகின்றார்.

| | | |
|---|---|---|
| தாருல் இப்தா நிறுவனம் | - | ரியாத் |
| ராபிததுல் ஆலமுல் இஸ்லாமி | - | மக்கா |
| பைதுஸ் ஸகாத் நிறுவனம் | - | குவைத் |
| ஜம்இய்யது இஹ்யாஇத் துராஸில் இஸ்லாமி | - | குவைத் |

அநாதைக் குழந்தைகள் அரவணைப்பு, விதவைகளுக்கு நிதி உதவி, வீடற்றோருக்கான வீட்டுத் திட்டம், குடி நீர் வசதிகுன்றிய பிரதேசங்களக்கு குழாய்க் கிணறு வசதிகள், இஸ்லாமிய கிராம அமைப்பு முறை, இயற்கை அனர்த்தத்தின் போது நிவாரணப் பணிகள், மருத்துவ முகாம், இரத்த தான முகாம், வசதியற்ற பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள், பல்கலைக்கழக மாணவர்களுகான புலமைப் பரிசில்கள், தாயிகள் பராமரிப்பு என்று பல்வேறு சமூகப் பணிகளை அவர் ஆற்றிவருகின்றார்.

இருபெரும் நிறுவனங்களை ஒருவர் வழி நடாத்துவது என்பது மிகவும் சிரமமானது. ஆனால், இளமைத் துடிப்புடன் அவர் சுறுசுறுப்பாகப் பணியாற்றுவது வியக்கத்தக்கது என அவரை சந்திக்க வெளிநாட்டிலிருந்து வந்தவர்களில் ஒருவர் குறிப்பிடுகின்றார்.

ஜம்இய்யாவின் பணிகளை "…பொறுப்புடன் கவனித்துக் கொள்வதில் முன்னணியில் இருப்பவர் JASM அமைப்பின் தலைவர் N.P.M. அபூபக்கர் சித்தீக் மதனீ அவர்கள்தான். தேனீ போன்ற சுறுசுறுப்பு! பேச்சுக்களில் அமைப்பு ரீதியிலான செயல்பாடுகளைப் பற்றித்தான் வருகிறது. சிந்தனையில் இதுவே மிகைத்து நிற்கும் போது, பேச்சும் அதைப் பற்றித் தானே இருக்கும். பெருநாள் மலர், ப: 60

**மாணவர் புலமைப் பரிசில் திட்டம் :**

அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள் பல்வகை கல்வி நிறுவனங்களை உருவாக்கி, அதன் மூலம் கல்விக்கு உயிர் கொடுத்து சேவை செய்து வருவதோடு மட்டும் தனது பங்களிப்பை மட்டுப்படுத்திக்கொள்ளாது, தனது மாணவரல்லாத வேறு கல்வி

நிறுவனங்களில் கல்வியைத் தொடர்வோருக்கும், உயர்கல்வி பெறும் பலருக்கும் பல உதவிளை தனது ஜம்இய்யா மூலம் வழங்கிவருகின்றார். இது அவரது விரிந்த சேவையையும் பரந்த மனப்பாங்கையும் காண்பிக்கிறது.

*“...நூற்றுக்கணக்கான பல்கலைக்கழக மாணர்களுக்குப் புலமைப் பரிசில்களை வழங்கி பல வைத்தியர்களினதும்,பொறியியலாளர்களினதும் உருவாக்கத்திற்குப் பெரும் பங்காற்றி வருகின்றார். இவ்வாறு நோக்கும் போது தேசிய கல்வி வளர்ச்சியிலும், முஸ்லிம் சமூகத்தின் கல்வி மேம்பாட்டிலும் ஆழமான, அழுத்தமான பங்களிப்பை எமது அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி நல்கி வருவதைத் தெளிவாகவே உணரலாம்.” (*Ismail Salafi. SHM, 2018)

## வெளிநாட்டு உறவுகள் :

இலங்கையிலுள்ள சவுதி மற்றும் குவைத் நாட்டு தூதரகங்களுடன் நெருங்கிய உறவைப் பேணிவருகின்றார். இந்தியா, பாகிஸ்தான்,பங்களாதேஸ், தாய்லாந், குவைத், சவூதி அரேபிய போன்ற நாடுகளுக்குப் பயணங்களை மேற்கொண்டுள்ளார். பல மாநாடுகளிலும் கலந்து கொண்டுள்ளார். அத்தோடு, இவரின் அழைப்பின்பேரில் பல வெளிநாட்டு அறிஞர்களும் கொடைவள்ளல்களும் தாருத் தவ்ஹீதையும் ஜம்இய்யாவையும் தரிசித்துச் சென்றுள்ளனர்.

## எளிமையும் ஒழுக்கமும் :

அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள் ஆடம்பரத்தை விரம்பாத, ஆடை உட்பட அவரது அனைத்து விடயங்களிலும் மிகவும் எளிமையைக் கடைப்பிடிக்கக் கூடிய பண்புடையவர். ஜம்இய்யாவிற்கு வேன் உள்ளது. அதற்கு சாரதியும் உள்ளார். முதீர் அவர்களுக்கு *Driviving Licence* வும் உள்ளது. எனினும், வீட்டிலிருந்து பள்ளிக்கும் அலுவலகத்திற்கும் அவரது துவிச்சக்கர வண்டியிலேயே வருவார். பாதையில் அவர் செல்லும் போது மிகவும் கண்ணியம் பேணுவார். ஓரங்கில் திரும்பிப் பார்க்க மாட்டார். சுமார் நான்கு தசாப்தங்களாக பொது வாழ்க்கையில் தொடராக ஈடுபட்டு வரும் அவர் இன்றுவரை சில மஸாயில் விடயங்களில்தான் விமர்சிக்கப்படுகின்றாரே தவிர, அவரது ஒழுக்கத்திலும் பொருளாதாரத்திலும் யாரும் அவரை விமர்சிக்கத் துணியவில்லை. இஸ்லாமிய அறிவுப் பாரம்பரியத்தை உலகிற்கு விட்டுச் சென்ற ஸலபுஸ் ஸாலிஹீன்கள் அறிவும் ஆன்மிக செழுமையும் மிக்கவர்களாக இருந்தனர். அந்த நேர்மை, சுயகட்டுப்பாடு, பக்குவம், ஆன்மிக செழுமை, ஒழுக்க விழுமியப் பாரம்பரியம் என்பன இவரிடமும் காணப்படுகிறது.

## சொற்பொழிவும் எழுத்துப் பணியும் :

தஃவாவை வெறும் சொற்பொழிவுகளுடன் மட்டும் மட்டுப்படுத்தக் கூடாது, இஸ்லாமியக் கலையாதாரங்களை ஆவண வடிவிலும் மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற தூர நோக்கில் அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்கள் உண்மை உதயம் என்ற சஞ்சிகையை உருவாக்கினார்கள். இன்றுவரை அதை ஜம்இய்யா வெளியிட்டு வருகிறது. இதில், அஷ்ஷெய்க் அபூபக்கர் ஸித்தீக் மதனி அவர்கள் சில ஆக்கங்களை எழுதியுள்ளார்கள். ஜம்இய்யாவின் பணிகள் அவரை சமூகத்திற்கு ஓர் எழுத்தாளராக அறிமுகப்படுத்தவில்லை. எனினும், இலங்கை முஸ்லிம் உம்மத்தின் அங்கீகாரத்தையும் நேசிப்பையும் பெற்ற பல எழுத்தர்களை அவர் தனது கற்பித்தல் செயற்பாடு மூலம் உருவாக்கியுள்ளார்.

1998ம் ஆண்டு நான் ஸலபிய்யாவில் பட்டம் பெற்று, நூலகத்தில் பணிபுரிந்த நேரம். அப்போது, நான் **நட்புக்கு இலக்கணம்** என்ற நூலை எழுதினேன். அதை முதீர் அர்கள்தான் புரூப் பார்த்தார்கள். அல்லாஹ்வின் நிழல் பெறுவோர் என்ற ஹதீஸ் இடம்பெற்று, அர்ஷின் நிழல் பெறுவோர் என்ற மொழிபெயர்ப்பு இடம்பெற்றிருந்தது.

அதையும் இன்னும் சில தமிழ்ப் பிழைகளையும் திருத்தித் தந்தார்கள். அந்தளவு மிக நுணுக்கமாக வாசித்துத் திருத்தும் தன்மையும் திறமையும் அவரிடம் உள்ளது. அவரது மதிப்புரையுடன் ஜம்இய்யாவின் மூலம் எனது நூலின் முதல் பதிப்பு வெளிவந்தது. வெளியீட்டுக்கான அனைத்து ஏற்பாட்டையும் செயலர் ஏ.எல். கலீல் ரஹ்மான் எம்.ஏ. அவர்கள் மேற்கொண்டார்கள். இந்த நூல் தர்கா நகரில் ஜம்இய்யா நிர்மானித்த மஸ்ஜிதுல் ஹுதா திறப்பு விழாவில் வெளியிடப்பட்டது. அஷ்ஷெய்க் இஸ்மாயீல் ஸலபி அவர்கள் நூல் அறிமுக உரையை நிகழ்த்தி, வெளியிட்டு வைத்தார்.

1997ம் ஆண்டு, தஜ்ஜாலின் வருகை என்ற தலைப்பில் பறகஹதெனியவில் நடந்த ஒரு நாள் மார்க்கச் சொற்பொழிவு நிகழ்வில் அவர் ஆற்றிய உரையைத் தொகுத்து, நூலாக்கம் செய்தேன். எனினும், அது அச்சு வாகனம் ஏற்றப்படவில்லை.

எழுத நேரம் கிடைக்காவிட்டாலும் அவரிடம் விரிந்த வாசிப்பு உள்ளது. உரைகள் நிகழ்த்துவதற்காக அவர் வாசித்துக் குறிப்பு எடுப்பது வழக்கம். அரபு மொழிப் புலமையும் தமிழறிவும் அவரிடம் உள்ளது. அதனால், வெளிநாடுகளிலிருந்து வெளிவரும் நவீன கால சஞ்சிகைகளில் வரும் துணுக்குகளை அவரது உரைகளில் குறிப்பிடுவார். லண்டனிலிருந்து வெளிவரும் அல்பயான், குவைத்திலிருந்து வெளிவரும் அல்புர்க்கான், எகிப்திலிருந்து வெளிவரும் அத்தவ்ஹீத் போன்ற அரபு சஞ்சிகைகளையும் அரபு இணையதளங்களிலும் அவரது தேடல் அதிகமாக இருக்கும்.

கம்பீரமான தோற்றம், மேடைப் பேச்சாளருக்குரிய மிடுக்கோடு, கனீரென்ற குரலில் சொற்பொழிவாற்றுவார். அவரது உரைப் பாணி கேட்போரை வசீகரித்து, ஆட்கொள்ளும் தன்மை கொண்டது. ஜம்இய்யாவினால் அமைக்கப்பட்ட பள்ளி திறப்பு விழாக்களில் சமூகப் புனரமைப்பில் மஸ்ஜித்களின் பங்கு என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். இன்று வரை ஜம்இய்யாவின் முக்கிய பள்ளிகளில் தொடர்ந்து ஜும்ஆ உரை நிகழ்த்திவருகின்றார். இன்னும் வளரும்